# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2259/34 - 2021 දෙසැම්බර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.23

*2259/34 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**6 ஆவது திருத்தம்**

இலங்கை கணக்காய்வுச் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 1989, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய மற்றும் 588/ 5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வுச் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக்குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும். திருத்தியமைக்கப்பட்ட இவ் ஏற்பாடுகள் அமைச்சரவையினால் கொள்கைசார் தீர்மானம் எடுக்கப்பட்ட 2021, செத்தெம்பர் 13 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*2021, திசெம்பர் 22.*

**பகுதி I**

*திருத்த இலக்கம் 01 - 1997 செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய மற்றும் 993/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 02 - 1998 திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய மற்றும் 1056/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 03 - 2008 ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய மற்றும் 1563/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 04 - 2015 மாச்சு மாதம் 04 ஆந் திகதிய மற்றும் 1904/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*
*திருத்த இலக்கம் 05 - 2017 ஒகத்து மாதம் 09 ஆந் திகதிய மற்றும் 2031/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*


1A - G 35640 — 15 (2021/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## பகுதி II

2. தற்போதுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 2.(I) மற்றும் (II) ஆகிய பகுதிகளில் உள்ளடங்கும் தரங்கள், சம்பளங்கள், ஆளணி எண்ணிக்கை மற்றும் பதவிப் பெயர்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.

(I) சேவை வகுதிக்குரிய தகவல்கள் :-

| சேவை வகுதி | பதவிப் பெயர் | சம்பளக் குறியீடு | ஆரம்பச் சம்பளப் படிமுறை | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிறைவேற்றுநர் | சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | AS-04 | படிமுறை 1 | 03 |
| | பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | | படிமுறை 1 | 15 |
| நிறைவேற்றுநர் | சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | AS-03 | படிமுறை 20 | 72 |
| | உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | | படிமுறை 12 | 455 |
| | கணக்காய்வு அத்தியட்சகர் | | படிமுறை 1 | |

(II) சம்பள அளவுத்திட்டம் : சிரேஷ்ட நிறைவேற்றுநர் - AS-04
ரூபா. 88,000-12 x 2,700- 120,400

நிறைவேற்றுநர் - AS-03
ரூபா. 47,615-10 x 1,335-8 x 1,630-17 x 2,170- 110,895

3. இப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியுயர்வுகளை வழங்குகையில் அமைச்சரவைப் பத்திர இலக்கம் : 21/1274/301/017 கொண்ட, கணக்காய்வுத் திணைக்களத்தை வலுவூட்டுதல் எனும் தலைப்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 யூலை மாதம் 8 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கு வழங்கப்பட்ட 2021 செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய, சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புகையில் சேவை மூப்பு மற்றும் திறமை எனும் அளவுகோல்களுள் சேவை மூப்பினை மாத்திரம் கவனத்திற் கொண்டு பதவியுயர்வுகள் வழங்கப்படும்.

இப் பதவியுயர்வுகளை வழங்குகையில் கவனத்திற் கொள்ளப்படும் ஏனைய தேவைப்பாடுகள் தொடர்ந்தும் ஏற்புடையவையாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.